# பொள்ளாச்சி நகராட்சி

## சாதாரண க் கூட்டம்

**21.10.2022 தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகரமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

<table>
<tr><th>வ.எண்</th><th>பொருள் விபரம்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>1</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் வாகனங்களான Tipper + LCV (5+9) ஆகிய வாகனங்களுக்கு வலை ( Net) தேவைப்படுகிறது அதற்கு ஆகும் உத்தேச செலவினமாக ரூ.23,000/-ஆகும். இச்செலவினத்தை நகராட்சிப் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.5660/2022/எச்2</td><td>தீர்மானம் எண். 358<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>2</td><td>பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்படும் TN 41 AU 6396 TATA ACE வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 21.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்கள்.<br>ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு<br><table><tr><th>வ. எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th></tr><tr><td>1</td><td>M/s. பீ.பி.செரிப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், 25/67, ஏ.பி.டி. ரோடு, பொள்ளாச்சி.</td><td>ரூ. 80,299/-</td></tr></table></td><td>தீர்மானம் எண். 359<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>M/s. ஸ்ரீ குருவாயூரப்பன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், 112, பழனி ரோடு, உடுமலைப்பேட்டை.</td><td>ரூ.78,291/-</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. ஸ்ரீ குருவாயூரப்பன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், 112, பழனி ரோடு, உடுமலைப்பேட்டை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.எச்2/4921/2022
</td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>
பொள்ளாச்சி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு மூலம் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை பணிகளான டெங்கு காய்ச்சல், கொரானா வைரஸ் இன்புளூன்ஸா H1, N1 மற்றும் பொது இடங்களில் கிருமிநாசினி தெளிப்பதற்கு தேவையான கிருமி நாசினிகள் பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், லெமன் கிராஸ் ஆயில் ஆகியவைகள் தேவைப்படுவதால் அவற்றை வாங்க ஆகும் உத்தேச செலவினமாக ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>தேவைப்படும் கிருமிநாசினிகள்:</u><br>
1. பிளிச்சிங் பவுடர் – 7000 MT<br>
2. சுண்ணாம்புத் தூள் – 7000 MT<br>
3. லெமன் கிராஸ் ஆயில் – 200 LT<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண். 360<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **ந.க.எண்.6396/2022/எச்2** | |
| 4 | பொள்ளாச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவின் மூலம் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் நகராட்சி பள்ளிகளின் கழிவறை பொது/சமுதாய கழிப்பிடங்கள் நகராட்சி அலுவலக கழிப்பிடங்கள் மற்றும் நுண் உரக்குடில்களில் உள்ள உரங்களை விரைவாக மக்குவதற்கும் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் வைத்திடும் பொருட்டு தேவையான கிருமிநாசினிகளான வெள்ளை பினாயில், லைசால் மற்றும் நுண்ணுயிர் திரவம் முதலியன கீழ்காணும் அளவுகளின்படி வாங்குவதற்கு தோராய செலவினமாக ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**தேவைப்படும் கிருமிநாசினிகள்:**<br>1. வெள்ளை பினாயில் – 1000 Liter<br>2. லைசால் – 500 Liter<br>3. நுண்ணுயிர் திரவம் – 200 Liter<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.5979/2022/எச்2** | **தீர்மானம் எண்.361**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 5 | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்படும் வாகனம் எண் TN 41 AM 2687 (Tipper) வாகனத்திற்கு பழுதுகள் நீக்கம் செய்வதற்கும் தகுதிச் சான்று பெறுவதற்கும் ஏற்படும் தோராய செலவினமாக ரூ.2,70,000/– ஆகும் இச்செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** | **தீர்மானம் எண். 362**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.6344/2022/எச்2</td><td></td></tr>
<tr><td>6</td><td>பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணியாளர்களுக்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான தளவாடப் பொருட்கள் இல்லாததால் பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி 2022 – 2023– ஆம் ஆண்டிற்கு தேவையான கீழ்க்கண்டுள்ள தளவாடப் பொருட்கள் வாங்க உத்தேச செலவினமாக ரூ.9,75,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>தளவாடப் பொருட்கள்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>கடப்பாறை(TATA)</td><td>30</td></tr>
<tr><td>2</td><td>மண்வெட்டி</td><td>100</td></tr>
<tr><td>3</td><td>கால்வாய் முட்டி (பெரியது) பிடியுடன்</td><td>200</td></tr>
<tr><td>4</td><td>கால்வாய் முட்டி (சிறியது) பிடியுடன்</td><td>200</td></tr>
<tr><td>5</td><td>இரும்புச் சட்டி</td><td>200</td></tr>
<tr><td>6</td><td>பிக்காஸ் பிடியுடன்</td><td>50</td></tr>
<tr><td>7</td><td>முள் கொத்து (பெரியது)</td><td>100</td></tr>
<tr><td>8</td><td>முள் கொத்து (சிறியது)</td><td>200</td></tr>
<tr><td>9</td><td>அருவாள்</td><td>100</td></tr>
<tr><td>10</td><td>கொத்து பிடியுடன்</td><td>200</td></tr>
<tr><td>11</td><td>பிளாஸ்டிக் டப் (குப்பை கூடை)</td><td>150</td></tr>
<tr><td>12</td><td>மிளிரும் மேலாங்கி</td><td>150</td></tr>
</table></td><td>தீர்மானம் எண்.363<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>13</td><td>கம்பூட்ஸ்</td><td>50</td></tr>
<tr><td>14</td><td>கை சீமார்</td><td>2000</td></tr>
<tr><td>15</td><td>தெரு பெருக்குதல் சீமார்</td><td>300</td></tr>
<tr><td>16</td><td>பிரஸ் கட்டை</td><td>100</td></tr>
<tr><td>17</td><td>ஒற்றைக் குச்சி</td><td>50</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 5980/ 2022/எச்2
</td>
<td></td>
</tr>
<tr>
<td>7</td>
<td>
பொள்ளாச்சி நகராட்சி 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் (Tied Grant) 2022–23-ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான நல்லூர் உரக்கிடங்கு காலியிடத்தில் Bio Mining முறையில் மீட்டெடுக்கப்படும் இடத்தில் நகர்ப்புற காடுகளை உருவாக்க மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.8.64 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி கடித ந.க.எண். 18276/2022/CFC–1, நாள்.26.08.2022–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதிக்கேற்ப 07.10.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>திரு.M.விக்னேஷ்குமார், பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.02% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/S.கே.ஆர்.காளிதாஸ் அன் கோ, பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.56%</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண். 364<br>பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><td></td><td></td><td>அதிகம்.</td></tr></table> வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.விக்னேஷ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி கடித ந.க.எண்.18276/2022/CFC-1, நாள்.26.08.2022-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>3. மேற்காண் பணி திட்டப்பணியாக இருப்பதாலும் உடனடியாக இப்பணியை மேற்கொண்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், இப்பணிக்கு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: **5730/2022/இ1** | |
| **8** | பொள்ளாச்சி நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (2021-22)-ன் கீழ் நகராட்சி வார்டு எண்.01, டைமண்ட் சிட்டி குறுக்கு வீதியில் தார் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கோயம்புத்தூர், அவர்களின் நிர்வாக அனுமதி கடித ந.க.எண். 08/2022/ஆ2, நாள்.17.09.2022-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதிக்கேற்ப 07.10.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் | **தீர்மானம் எண். 365**<br>**பதிவு செய்யப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.R.சுப்ரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.06% குறைவு. |
| 2. | M/s:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.83% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.R.சுப்ரமணியம், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கோயம்புத்தூர், அவர்களின் நிர்வாக அனுமதி கடித ந.க.எண்.08/2022/ஆ2, நாள்.17.09.2022–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
3. மேற்காண் பணி திட்டப்பணியாக இருப்பதாலும் உடனடியாக இப்பணியை மேற்கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், இப்பணிக்கு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்: 3252/2020/இ1**</td>
<td></td>
</tr>
<tr>
<td>9</td>
<td>பொள்ளாச்சி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021–22-ன் கீழ் SRIMBHS பள்ளியில் Skating Ground மைதானத்தில் தார்சாலை வசதி, மின்விளக்குகள் மற்றும் காத்திருப்போர் அறை வசதிகள் செய்தல் பணிக்கு ரூ.49.00 இலட்சம்</td>
<td>தீர்மானம் எண்.366<br>பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மதிப்பீட்டிற்கு 30.09.2022–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>திருவாளர்கள்:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.75% அதிகம்.</td></tr>
<tr><td>2.</td><td>திரு,R.சுப்ரமணியம், பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>
2. மேற்படி பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.27519–50/2021/P2, நாள். 25.08.2022–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>
ந.க.எண்: 3865/2022/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>10</td>
<td>பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகளான சாலைப் பணிகள், குடிநீர் பணிகள், பாதாள சாக்கடை பணிகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு அடிப்படை வசதிப் பணிகள் நடைபெற்று வருவதால், மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதியும், இந்நகராட்சியில் போதிய தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாத</td>
<td>தீர்மானம் எண். 367<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | காரணத்தாலும், Outsourcing முறையில் தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–I-ல் 1 நபர், தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–II-ல் 1 நபர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் கிரேடு–III-ல் 1 நபர் ஆகிய 3 தொழில்நுட்ப உதவியாளர்களை பணிக்கு அமர்த்த வேண்டியுள்ளது. மேற்கண்ட Outsourcing பணியினை சுய உதவிக் குழுக்களிடம் விலைப்புள்ளி பெற்று, தற்காலிகமாக டிசம்பர் (2022), ஜனவரி மற்றும் பிப்ரவரி (2023) ஆகிய 3 மாதங்களுக்கு பணியினை மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியாளர்களுக்கான ஊதியத்தினை Schedule of rates 2022–23–க்கான விலைப்பட்டியலில் உள்ளவாறு EPF, ESI மற்றும் Insurance உடன் மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவு தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி பெறலாம். மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை 3 மாதங்களுக்கு சுய உதவிக் குழுவின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2072/2022/இ1** | |
| **11** | பொள்ளாச்சி நகராட்சியிலுள்ள 9 உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் சுய உதவிக்குழு மூலம் பணியாட்களை அமர்த்துவதற்கு நவம்பர் 2022 மாத பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.4.30 இலட்சம் ஆகும்.<br>எனவே, விலைப்புள்ளி கோரி இப்பணியை செய்ய 12.10.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு | **தீர்மானம் எண். 368**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | பெயர் | விலைப்புள்ளி தொகை ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு,<br>காளியண்ணன் புதூர்,<br>கோவில்பாளையம்,<br>பொள்ளாச்சி – 642110. | ரூ.576.00 |
| 2 | ராஜகாளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு,<br>காளியண்ணன் புதூர்,<br>கோவில்பாளையம்,<br>பொள்ளாச்சி. | ரூ.635.00 |
| 3 | மாகாளியம்மன் மகளிர் சுயஉதவிக்குழு,<br>சேரன்நகர்,<br>கோவில்பாளையம்,<br>பொள்ளாச்சி. | ரூ.685.00 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாகவும் மற்ற விலைப்புள்ளிகளை விட குறைவாகவும் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.576.00 என விலைப்புள்ளி அளித்துள்ள காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக ஒரு நபருக்கு நாள்

<table>
<tr><td></td><td>ஒன்றுக்கு ரூ.576.00 என விலைப்புள்ளி அளித்துள்ள காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 2012/2022/இ1</td><td></td></tr>
<tr><td>12</td><td>பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்டவாறு Outsourcing முறையில் சுயஉதவிக்குழு மூலம் பணியாட்களை அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>1). வெங்கடேசா காலனி OHT<br>2).Shumps - 2 Nos</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>2.</td><td>மகாலிங்கபுரம் OHT (2 Nos)</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>3.</td><td>சுதர்சன் நகர் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>4.</td><td>கே.ஆர்,ஜி,பி நகர் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>5.</td><td>VKV லே அவுட் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td>6.</td><td>KC பார்க் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>7.</td><td>சோமசுந்தரம் லே அவுட் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td>8.</td><td>ஜோதி நகர் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>21 நபர்கள்</td></tr>
</table>
மேற்கண்ட பணியாட்களுக்கு Outsourcing முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலின் படி</td><td>தீர்மானம் எண்.369<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021–ன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ள கருத்துருக்கள் அனுப்பப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(Ms).No.112, Dated.17.08.2022 –ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை விதிமுறைகளுக்குட்பட்டு பணியாளர்களை அமர்த்திக்கொள்ள மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. மேற்காண் பணியை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தலைமைப் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்ற பின்பு தான் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். ஒப்பந்தபுள்ளிகள் கோரும் வரையிலும் மேற்கண்ட பணியை சுய உதவிக் குழு மூலம் டிசம்பர் 2022 மாதத்திற்கு, மேற்கண்ட பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதத்தின் படி கூலி, **EPF, ESI, Insurance** தொகையுடன் ஊதியம் வழங்கவும், இதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.30இலட்சம் ஆகும். மேற்காண் செலவு தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் இப்பணியினை சுய உதவிக்குழுவின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2012/2022/இ1 | |

| | | |
|---|---|---|
| | | |
| 13 | பொள்ளாச்சி நகராட்சி மரப்பேட்டை வீதியில் அமைந்துள்ள தேசிய நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் தங்கியுள்ள வீடுகளற்ற நபர்களுக்கு மூன்று நேரம் உணவுகள் கட்டிடத்தினை அலங்கரித்தல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை அவர்களின் கடிதத்தில் 10.10.2022–ல் வீடுகளற்ற நபர்களின் தினமாக கொண்டாடிட தெரிவிக்கப்பட்டும் அதற்காகும் செலவு தொகையாக ரூ.39,900/– மட்டும் அனுப்பியுள்ளது. நகராட்சிக்கு வரப்பெற்ற தொகையில் மேற்காணும் செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>மன்றம்அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 5239/2022/எச்2** | **தீர்மானம் எண்.370**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 14 | பொள்ளாச்சி நகராட்சியின் 2020 - 2021ம் நிதி ஆண்டிற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை, உதவி இயக்குநர் கடிதம் தொ.கொ.22/அ/22 நாள் 06.10.2022ல் (உடனிகழ் தணிக்கை) துறை மூலம் அனைத்து கணக்குகளின் மீதும் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை முடிவு அறிக்கை பெறப்பட்டு தொகை அரசு கணக்கில் செலுத்த தெரிவித்து உள்ளார்.<br>எனவே அரசாணை எண்.62 நிதித்துறை (உள்ளாட்சி நிதித் தணிக்கை) நாள்.17.01.1994 மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 மற்றும் விதிகள் 2016ல் உள்ளவாறு உடன்நிகழ் தணிக்கை பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர படிகளின் உண்மை செலவில் **50%** தணிக்கை கட்டணத் தொகை **ரூ.20,10,638/–** (ரூபாய் இருபது இலட்சத்து பத்தாயிரத்து ஆறுநூற்றி முப்பத்து எட்டு மட்டும்) **IFHRMS New code.00706011OAA22706** என்ற அரசு தலைப்பில் தொகை | **தீர்மானம் எண். 371**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>மேற்கண்ட தொகை நகராட்சி நிதியிலிருந்து செலவிட அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். பி4/6680/2022</td>
<td></td>
</tr>
<tr>
<td>15</td>
<td>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க கோவை மாவட்ட வருகையையொட்டி பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பொதுமக்கள் அறியும் வகையில் கீழ்கண்ட தினசரி நாளிதழ்களில் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. விளம்பரம் பிரசுரம் செய்ததற்கு பட்டியல் தொகை வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது விவரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம் பிரசுரம் செய்த நாளிதழ்களின் பெயர்</th><th>விளம்பரம் பிரசுரம் செய்த நிறுவனம்</th><th>பட்டியல் தொகை</th></tr>
<tr><td>1</td><td>தமிழ் முரசு</td><td>Kal Publication (p) Ltd, கோவை</td><td>23,999</td></tr>
<tr><td>2</td><td>தினகரன்</td><td>Kal Publication (p) Ltd, கோவை</td><td>47,999</td></tr>
</table>
மேற்காண் நிறுவனங்களுக்கு பொது நிதியிலிருந்து பட்டியல் படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 5776/2026/இ1</td>
<td>தீர்மானம் எண். 372<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 16 | பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.36–யில் உள்ள VIP கார்டன் பகுதியில் உள்ள தெருவிளக்குகள் தற்பொழுது வரை லே–அவுட் அமைத்தவர்கள் பெயரில் இருந்து வந்தது. தற்பொழுது ஆணையாளர் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை 02.09.2014 ஆம் தேதி முதல் M/S .SCHNELL ENERGY EQUIPMENT (P) LTD, கோயம்புத்தூர் நிறுவனத்தார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பகுதிகளில் உள்ள 22 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை, மேற்படி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு செய்திட ஒப்படைப்பு செய்யவும், ஆண்டு பராமரிப்பு செலவினங்களை மேற்கெள்வதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 3878/2012/இ2** | **தீர்மானம் எண்.373**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 17 | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.13, சுந்தரம் லே அவுட், சுந்தரம் லே அவுட் விஸ்தரிப்பு மற்றும் வள்ளியம்மாள் லே அவுட் பகுதிக்கு புதிதாக கிணற்றுநீர் வேண்டி பகிர்மான குழாய் அமைக்க நகர மன்ற உறுப்பினர், கோரிக்கை தெரிவித்துள்ளார். இதற்கிணங்க இப்பகுதியில் கிணற்றுநீர் விநியோகத்திற்கான பகிர்மான குழாய் மற்றும் பொதுக்குழாய்கள் அமைப்பதற்கு, இதற்கான மதிப்பீடு ரூ.0.66 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 374**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.2191/2022/இ1 | |
| 18 | பொள்ளாச்சி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் 267 தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பந்த பணியாளர்கள் பணிக்காலம் 31.08.2021–ல் முடிவுற்று அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரருக்கு தற்காலிகமாக ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு ஏற்கனவே வழங்கிய ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. வெளிக்கொணர்வு தூய்மைப் பணியாளர்கள் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 2022–2023–ம் வருடத்திற்கு நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி ரூ.606/– வழங்க கோரி 01.10.2022 முதல் 03.10.2022 வரை காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து இப்பொருள் குறித்து மன்றத்தில் பொருள் சேர்த்து அரசு அனுமதிக்குப் பின் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிபுரிந்து வருகின்றனர். இப்பொருள் தொடர்பாக மன்றம் பரிசீலித்து முடிவுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>மன்றத்தின் பரிசீலினைக்கும் முடிவுக்கும்.<br>**[கோப்பு எண். 5966/2022/எச்3]** | **தீர்மானம் எண். 375**<br>**கோரிக்கை படி தினக்கூலி வழங்க பரிசீலிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டு தீர்மானிக்கப்படுகிறது.** |
| 19 | பொள்ளாச்சி நகராட்சி குத்தகையான இரயில் நிலைய கடை எண்.3 மற்றும் 4 திரு.வெங்கடாச்சலபதி என்பவர் 10.10.2018ல் குத்தகை எடுத்துள்ளார். இக்குத்தகைதாரர் 31.03.2021ல் 3 ஆண்டு நிறைவு பெற்றதால் தன்னால் தொடர்ந்து கடையை நடத்த முடியவில்லை என்று கூறி மேற்கண்ட கடையை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்து விட்டார். மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு | **தீர்மானம் எண். 376**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>செலுத்திய தொகையினை தனக்கு திருப்பி வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார்.<br>இதில் குத்தகைதாரர் 05.02.2016 மற்றும் 11.06.2018ல் செலுத்திய தொகை ரூ.2,54,951/–யை காலங்கடந்த வைப்புநிதி கணக்கில் கொண்டு செல்லப்பட்டுள்ளதால் மேற்படி குத்தகை வைப்புத் தொகையினை குத்தகைதாரருக்கு திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :</u><br>அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். பி4/4706/2022</td>
<td></td>
</tr>
<tr>
<td>20</td>
<td>பொள்ளாச்சி நகராட்சி கல்வி நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான கோட்டூர் சாலை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சீர்மிகு வகுப்பறை (Smart Class Room) அமைத்தல் பணிக்கு ரூ.19.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.09.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>M/s.K.S.Smart Solution Private limited, Chennai.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.50% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/s .Temple Tech Innovations Provate Limited, Chennai.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 28.82% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.K.S.Smart Solution Private limited, Chennai</td>
<td>தீர்மானம் எண். 377<br>இந்த பணிகளை விட அத்தியாவசிய பணிகள் செய்ய தற்போது தேவை எழுந்துள்ளதால் ஒத்தி வைக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.317, நாள்.30.08.2022–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.50% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.K.S.Smart Solution Private limited, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 5459/2022/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>21</td>
<td>பொள்ளாச்சி நகராட்சி கல்வி நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான மகாலிங்கபுரம் சமத்தூர் இராம அய்யங்கார் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் (SRIMBHS) சீர்மிகு வகுப்பறை (Smart Class Room) அமைத்தல் பணிக்கு ரூ.19.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு 21.09.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>M/s.K.S.Smart Solution Private limited, Chennai.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.50% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/s .Temple Tech Innovations Provate Limited, Chennai.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 28.82% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.K.S.Smart Solution Private limited, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண். 378<br>இந்த பணிகளை விட அத்தியாவசிய பணிகள் செய்ய தற்போது தேவை எழுந்துள்ளதால் ஒத்தி வைக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.316, நாள்.30.08.2022–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.50% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.K.S.Smart Solution Private limited, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்: 5453/2022/இ1** | |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா நவநீதகிருஷ்ணன்**

**நகர் மன்ற தலைவர்**

**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**

**பொள்ளாச்சி நகராட்சி**